# Copy of Deposition

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண்.2/2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: கார்த்தி (பி.வா.சா.1) | ஜாதி: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது: |

**2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03ம் நாள் செவ்வாய்கிழமை** பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் எழுத்தர் ம.பெரியசாமி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா.1 முதல் விசாரணை:-**

பி.வா.சா.1 ஆகிய நான் இந்த அசல் வழக்கில் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்களான

1) 18.05.2001ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி மற்றும் தங்கராஜ் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ.1 ஆகவும்**

**2)** 23.11.2007ம் தேதியிட்ட தனலட்சுமிக்கு தங்கராஜ் மற்றும் ராமசாமி எழுதிகொடுத்த பொது அதிகார ஆவணம் **அசல் பி.வா.சா.ஆ.2 ஆகவும்**

3) 12.02.2018ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு தங்கராஜ் எழுதிகொடுத்த கிரயப்பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.3 ஆகவும்**

4) 02.09.2024ம் தேதியிட்ட கொந்தளம் ஆ கிராமம் பட்டா எண்.275 கணினி சிட்டா

இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.4 ஆகவும்**

5) கொந்தளம் ஆ கிராமம் புல எண்.387/2B உண்டான ஆ பதிவேடு இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.5 ஆகியவற்றை பிரதிவாதி தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு பிராது தள்ளுபடியாக வேண்டுகிறேன்.**

**பி.வா.சா1 –குறுக்கு விசாரணை (வாதி தரப்பு ):-**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

VELLINGIRI LOGANATHAN

Digitally signed by VELLINGIRI LOGANATHAN
Date: 2024.09.03 16:58:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.